**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2025 ஆம் ஆண்டு ஜீலை 15-ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**இடைக்கால மனு எண்.7/2025**
**இன்**
**அசல் வழக்கு எண்.77/2022**

1. கண்ணுச்சாமி
2. சுமதி .... மனுதாரர்கள்/1,3 பிரதிவாதிகள்

/ எதிர் /

1.S.பாஸ்கரன்
2.ஜோதி
3.ஆனந்தநாயகி
4.செங்கோட்டு மணி
(மேற்படி 4 ம் வாதிக்கு பவர் ஏஜெண்டு
1 ம் வாதி பாஸ்கரன் என்பவர் மூலம்)
5. நாகராஜன்
6. கண்ணன்
7. செல்வம் (**இறப்பு**)
8. பஞ்சவர்ணம்
9. கார்த்திக்ராஜா
10. சிவாஸ்ரீ .... 1 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
11. சரவணச்சந்திரன்
12. தமிழக அரசுக்காக அதன்
மாவட்ட ஆட்சியர், சிவகங்கை
13. வருவாய் கோட்டாட்சியர், சிவகங்கை
14. வட்டாட்சியர், மானாமதுரை
15. சார்பதிவாளர், மானாமதுரை .... 11 முதல் 15 எதிர்மனுதாரர்கள்/
2, 4 முதல் 7 வரை பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 08.07.2025 தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலம் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 மற்றும் 8 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 11 எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.முத்துச்சாமி அவர்கள் ஆஜராகியும், 12 முதல் 15 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1. இம்மனுவில் மனுதாரர்கள் / 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் சிபிசி ஆர்டர் 26, ரூல் 9 மற்றும் பிரிவு 151ன் கீழ் நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து அவரை தாவா சொத்துக்களையும், அதை சுற்றியுள்ள இடங்களின் அமைப்புகளையும், நான்குமால்கள் மற்றும் அளவுகளை பார்வையிட்டும் உபயதரப்பு உரிமை மாற்ற ஆவணங்கள் மற்றும் வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் பூமியில் நிர்ணயம் செய்தும், அதன் தற்போதைய அமைப்புகள், அளவுகள் மற்றும் நான்குமால்கள் குறித்து விரிவான அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்திட உத்தரவிடக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:**

எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் பெற்று பிராதில் கூறியுள்ளவைகள் சரி என்று நிரூபித்திட எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், நீதிமன்ற ஆணையர் நியமனம் பெற்று உபயதரப்பு உரிமைமாற்ற ஆவணங்கள் மற்றும் வருவாய்துறை ஆவணங்களின் படி தாவா சொத்தை பூமியில் நிர்ணயம் செய்தால் பிராதில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் தவறு என்று நீதிமன்றத்திற்கு தெளிவாகிவிடும் என்பதாலேயே நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், எனவே தாவா சொத்துக்களின் உண்மை நிலையை நீதிமன்றத்திற்கு தெளிவாக்கிட நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து தாவா சொத்துக்களையும், அதை சுற்றியுள்ள இடங்களின் அமைப்புகளையும் பார்வையிட்டு உபயதரப்பு ஆவணங்கள் மற்றும் வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் நிர்ணயம் செய்தும், அதன் தற்போதைய அமைப்புகள், அளவுகள் மற்றும் நான்குமால்கள் குறித்து விரிவான அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்திட உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. 1 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு எதிருரையின் சுருக்கம் :**

தாவா சொத்துக்களின் பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 10வது இலக்க ஆவணமான பாகவிஸ்தி ஆவணத்தில் கண்ட "A" செட்டியூல் சொத்துக்கள் 1ம் எதிர்மனுதாரின் தகப்பனார் சுப்பிரமணியபிள்ளைக்கு கிடைத்ததன் அடிப்படையிலேயே தாவா வழக்கில் உரிமைவிளம்புகை

கோரப்பட்டுள்ளது என்றும், 1ம் பிரதிவாதி வருவாய் துறையில் மோசடியான உட்பிரிவுகளை ஏற்படுத்தி பட்டா ஏற்படுத்திக்கொண்டு 3ம் பிரதிவாதி சுமதியுடன் சேர்ந்து போலி ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளார் என்றும், அந்த ஆவணத்தை ரத்து செய்ய கோரி தங்களால் விளம்புகை செய்யக் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி விபரங்களை தெரிந்து கொண்ட மனுதாரர்கள் வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தாவா மனுவை தாக்கல் செய்துள்ளதாக கூறி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>4. 11 முதல் 15 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம் :</u>**

தாவா நான்கு லக்க சொத்து சம்பந்தமாக மனுதாரர் எதிர்வழக்குரையில் நான்குமால் அளவு குறித்து ஆட்சேபனை செய்திருப்பார் என்றும், அப்பொழுதே தாவா சொத்தின் இயற்கை அமைப்புகளை ஆய்வு செய்ய மனு தாக்கல் செய்யவில்லை என்றும், தாவா சொத்து சம்பந்தமாக வருவாய்துறை ஆவணங்கள் உபயதரப்பினரின் உரிமைகளை நிலைநாட்ட போதுமானதாகும் என்றும், தற்பொழுது வாதிகள் தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் விசாரணையை காலம் கடத்தவும், மேலும் தாவா சொத்துக்களின் ஆவணங்களை நீதிமன்ற ஆணையர் மூலம் சேகரிக்கவும் மனுதாரர் மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**5. இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

5.1. இந்நிலையில் இவ்வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்பட்டு மனு சொத்தை பார்வையிட்டு அளந்து அதன் அமைப்புத்தன்மையை (physical features) தாக்கல் செய்தால் தான் இவ்வழக்கில் முறையாக முடிவு செய்ய இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

5.2. மேலும் எந்தெந்த சூழ்நிலைகளில் வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க வேண்டும் என்ற மேன்மை பொருந்திய மதுரை உயர்நீதிமன்ற வழக்கை "The Madurai Bench of Madras High Court, Dated.26.09.2019, CORAM:THE HONOURABLE MR.JUSTICE N.ANAND VENKATESH, CRP PD (MD) NO.970 OF 2012 and MP(MD) No.1 of 2012" கருத்தில் கொண்டு இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

5.3. எனவே வழக்கறிஞர் திரு.சுரேஷ்பாபு அவர்களின் ஜீனியர் வழக்கறிஞர் திரு.N.மணிகண்டன், B.Sc.,L.L.B., அவர்களை வழக்கின் வழக்கறிஞர் ஆணையாளராக நியமித்து தாவா சொத்துக்களையும், அதை சுற்றியுள்ள இடங்களின் அமைப்புகளையும், நான்குமால்கள் மற்றும் அளவுகளை பார்வையிட்டும் உபயதரப்பு உரிமை மாற்ற ஆவணங்கள் மற்றும் வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் பூமியில் நிர்ணயம் செய்தும், அதன் தற்போதைய அமைப்புகள், அளவுகள் மற்றும் நான்குமால்கள் குறித்து வரைபடத்துடன் கூடிய தெளிவான அறிக்கையை புகைப்படத்துடன் தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

மேலும் மனுதாரர் வழக்கறிஞர் ஆணையாளர் கட்டணமாக ரூ.10,000/- இம்மனு உத்தரவு தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் வழக்கறிஞர் ஆணையர் வசம் வழங்கி அதற்குரிய ஆதாரத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக வழக்கறிஞர் திரு.N.மணிகண்டன், B.Sc.,L.L.B., அவர்களை இந்த வழக்கின் வழக்கறிஞர் ஆணையாளராக நியமித்து மனுச்சொத்தை பார்வையிட்டு 22.08.2025ம் தேதிக்குள் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டு இம்மனு செலவுதொகையின்றி அனுமதிக்கப்படுகிறது. அழைக்க:- 22.08.2025.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஜீலை 15-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.07.15 16:57:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதார்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

எதிர்மனுதார்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.07.15 16:57:33 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**District Munsif Court**
**Manamadurai**

**IA.No.7/205**
**in**
**OS.No. 77/2022**

**Order**
**Dated 15.07.2025**